மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06-ம் நாள் வெள்ளிக்கிழமை

அ.வ.எண். 112/22

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: சுப்புலெட்சுமி
தேதி : 06.02.26
வயது :
த/பெ : அய்யம்பெருமாள்
கிராமம் :
தொழில் :
மாவட்டம்:

---

06.02.26 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதி மற்றும் வாதிகள் தரப்பு 1ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து உள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும்.

2.10.06.1921 ம் தேதி தபசில் சொத்து சர்வே எண் 711/2 ல் 6.75 செண்டினை கரையாள பிள்ளை கைலாசம் பிள்ளைக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 1 ஆகும். 15.06.1932 ம் தேதி கைலாசம்பிள்ளை ராமலெட்சுமி அம்மாளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 2 ஆகும்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.06 18:06:15 +0530

3.29.09.1969ம் தேதி தபசில் சொத்தில் 3.25 செண்டினை பொறுத்து குமாரசாமி பிள்ளை, கைலாசம்பிள்ளை, சேரந்தையாபிள்ளை, ஆறுமுகத்தம்மாள் ஆகியோர்களிடையே ஏற்பட்ட பாகபிரிவினை ஆவணத்தின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 3 ஆகும். 16.02.2007ம் தேதி தபசில் சொத்துக்களை வள்ளியம்மாள் எனக்கு எழுதி கொடுத்த செட்டில் மெண்ட் ஆவணத்தின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 4 ஆகும். 29.11.2023ம் தேதிய தாவா சொத்திற்கு என் பெயரில் உள்ள கணிணி பட்டா நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 5 ஆகும்.

4.தபசில் சர்வே எண் 711க்குரிய கணிணி வழி புல வரைபடத்தினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 6 ஆகும். 16.02.2007ம் தேதி தபசில் சொத்துக்களை காண்பிக்கக்கூடிய புகைப்படங்கள் (5 எண்ணம்)மற்றும் குறுந்தகட்டினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 7 ஆகும். 27.12.2021ம் தேதி பிரதிவாதிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 8 ஆகும். 12.01.2021ம் தேதி பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 9 ஆகும்.

5.ஸ்ரீவைகுண்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண் 162/2015ன் தீர்ப்பாணையின் இணையவழி நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 10 ஆகும். மேற்படி அசல் வழக்கு எண் 162/2015ன் தீர்ப்புரையின் இணையவழி நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 11

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.06 18:06:21 +0530

ஆகும். மாண்புமிகு ஸ்ரீவைகுண்ட சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண் 75/2023 ன் 04.10.2024 ம் தேதி பிறப்பிக்ககப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 12 ஆகும். மேற்படி மேல்முறையீட்டு வழக்கு எண் 75/2023 ன் தீர்ப்புரையின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 13 ஆகும்.

6.நீதின்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 1 ஆகும். ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ 2 ஆகும். ஆணையர் தாக்கல் செய்துள்ள புல எண் 711 க்குரிய புல வரைபடம் நீ.ம.சா.ஆ 3 ஆகும்.

**வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.06 18:06:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.